**Previous Examination date – 01.10.2024**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 682 of 2012**

**Deposition of Witness P.W.3**

| | |
|---|---|
| **Name : மஞ்சநாதன்** | **Father/Husband's Name : அழகர்சாமி** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling :** |
| **Religion :** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 18.02.2026.**

**A1 to A3 present**.

**முதல் விசாரணை**

1. நான் தற்போது தாலுகா காவல்நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கின் விசாரணை அதிகாரி சார்பு ஆய்வாளர் திருமதி.பார்வதி அவர்களுடன் பணிபுரிந்துள்ளேன். சார்பு ஆய்வாளர் திருமதி.பார்வதி அவர்களின் கையொப்பம் எனக்கு நன்கு தெரியும். திருமதி.பார்வதி தாலுகா காவல்நிலையத்தில் கடந்த 03.01.2012ம் தேதி அதிகாலை 3.00 மணிக்கு நிலைய பொறுப்பில் இருந்த போது பழனி அரசு மருத்துவமனையிலிருந்து கிடைத்த தகவலின் அடிப்படையில் பழனி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த சுந்தரம் மகன் அழகர் சாமி என்பவரை விசாரித்து கொடுத்த வாக்குமூலத்தின் அடிப்படையில் புகார் வாக்குமூலம் பதிவு செய்து அன்றே நிலையம் வந்து நிலைய காவல்நிலைய கு.எண்.4/2012 பிரிவுகள் 294(b),341,324 இ.த.ச பிரிவின் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளார். தற்போது என்னிடம் காட்டப்படும் அச்சு முதல்தகவல்அறிக்கை அவர் தயார் செய்தது தான். **அச்சு முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. சம்பவயிடம் சென்று சாட்சிகள் மாரியப்பன்,மருதகாளி ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தைப்பார்வையிட்டு பார்வைமகஜர் தயார் செய்து மாதிரிவரைபடம் வரைந்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றும், அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். **பார்வைமகஜர் அ.சா.ஆ.3 மற்றும் மாதிரிவரைபடம் அ.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு பட்டியல் சாட்சிகள் அழகர்சாமி, சந்திரன்,முருகன்,முத்து,ஆண்டி, மாரியப்பன் ஆகியோர்களை தனித்தனியாக

விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் இவ்வழக்கின் எதிரியை தேடி வந்த நிலையில் எதிரி துரைசாமி, ராமசாமி, சங்கர் ஆகியோர்களை தேடி வந்த நிலையில் அழகாபுரி பஸ் ஸ்டாப் அருகே நின்று கொண்டிருந்த எதிரிகளை 03.01.2012ம் தேதி காலை 10.15 மணிக்கு கைது செய்து தக்க வழி காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைக்கப்பட்டார். பின்னர் காயம்பட்ட அழகர்சாமி என்பவருக்கு சிகிச்சையளித்த மருத்துவர் பாலசுப்பிரமணி என்பவரை விசாரித்து விபத்து பதிவேடு பெற்று வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். **விபத்து பதிவேடு அ.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பட்டியல் சாட்சி 1க்கு ஏற்பட்ட காயம் குறித்து "No openion could not be given" என சான்றளித்துள்ளார். பின்பு வழக்கின் விசாரணை முடித்து எதிரி மீது பிரிவுகள் 294(b),341,324 இ.த.சவின் கீழ் 29.02.2012ம் தேதி குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

2. நான் ஆவணத்தின் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். அ.சா.1 கொடுத்த புகாரை முறையாக விசாரிக்காமல் காவல்நிலையத்தில் வைத்து ஆவணங்களை தயார் செய்து பொய்யான குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும், எதிரி குற்றமற்றவர் என்று சொன்னால் சரியல்ல.

M PONPANDI

Digitally signed by M PONPANDI
Date: 2026.02.18 17:53:50 +0530

நீதித்துறை நடுவர்,
பழனி.